**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | | | |
| Miscellaneous | : | Village: தெற்கு தெரு, மதகு சாலை | | |
| Preliminary Register | : CC 174/2023 | Age | : 50 | |
| Sessions | : | Taluk | : | |
| Deposition of Witness for | : LW-3/PW- 2 | Religion | : | |
| Name | : கருப்பையன் | | | |
| Father's/Husband's Name | : கலியமூர்த்தி | | | |
| Nationality | : Indian | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 27.02.2026.**

சாட்சியை பந்தநல்லூர் காவலர் திரு. பிரபாகரன்என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிகள் ஆ%ர்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது மதகுசாலை மெயின்ரோட்டில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். அணைவரும் எனது பக்கத்து தெருவை சார்ந்தவர்கள். அ.சா.1 மற்றும் 1 வது எதிரி கணவன் மனைவி ஆவார்கள். அவர்கள் குடும்பத்தில ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியது. நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை, கேள்விப்படவும் இல்லை. அசா.1 ஆஜர் எதிரிகளுக்கு எதிராக கொடுத்த புகார் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

போலிசார் விசாரணையிலும் புகார் மனுவிலும் கடந்த 15.1.2021ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நான் அ.சா.1 வீட்டு வழியாக சென்றபோது அ.சா.1 ஐ அவரது கணவர் ஆபாசமாக பேசி கையில் வைத்திருந்த கேபிள் ஒயரால் அ.சா.1 ஐ அடித்தார் என்றும், அவரது அண்ணன் பிரபு மூங்கில் பிளாச்சால் அ.சா.1 ஐ அடித்தார் என்றும் அ.சா.1 ன் கணவர் அ.சா.1 ஐ கொல்லாமல் விடமாட்டேன் என்று அ.சா.1 ஐ மிரட்டினார் என்றும், அ.சா.1 அவரது அண்ணனுக்கு செல்போன் மூலமாக தெரிவித்தார் என்றும், அவரது அண்ணன் அசா.1 ஐ கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து சிகிச்சை முடித்து பின்பு பந்தநல்லூர் காவல நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தாகவும் சொன்னால் சரியல்ல. விவரங்களை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது தற்போது 1வது எதிரி கணவர் என்பதாலும், நான் தற்போது கணவருடன் சேர்ந்து வாழ்ந்து வருவதாலும், நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் ஆகிவிட்டதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: தெற்கு தெரு, மதகு சாலை |
| Preliminary Register : CC 174/2023 | Age : 29 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW-1/PW-1 | Religion : |
| Name : சத்தியபாமா | |
| Father's/Husband's Name : சிவா | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 27.02.2026.**

சாட்சியை பந்தநல்லூர் காவலர் திரு. பிரபாகரன்என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிகள் ஆ%ர்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் மதகு சாலை தெற்கு தெருவீல் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுகுடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரி எனது கணவர். 2 வது எதிரி எனது கணவரின் உடன் பிறந்த சகோதரர். சுமார் 5 வருடத்திற்கு முன்பு எனக்கும் எனது கணவருக்கும் எனது கணவரின் குடும்பத்தாருக்கும் இடையே மனஸ்தாபம் ஏற்பட்டது. தற்போது எங்கள் வீட்டு பெரியோர்கள் முன்னிலையில் சமாதானமாக பேசி நானும் எனது கணவரும் ஒன்றாக குடித்தனம் செய்து வருகிறோம். எனது கணருடன் மனஸ்தாபம் ஏற்பட்டிருந்ததால் பந்தநல்லூர் காவல் நிலையம் சென்று கூறினேன். அங்கு போலீசா

எழுதி வைத்திருந்த பேப்பரில் கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் விசாரணையிலும் புகார் மனுவிலும் கடந்த 15.1.2021ம் தேதி மதியம் 12.30 மணியளவில் எனது கணவருடன் வீட்டுக்கு மளிகை சாமான் எதுவும் இல்லை என்று சொன்னதால் எனது கணவர் என்னை ஆபாசமாக பேசி கையில் வைத்திருந்த கேபிள் ஒயரால் என்னை அடித்தார் என்றும், அவரது அண்ணன் பிரபு மூங்கில் பிளாச்சால் என்னை அடித்தார் என்றும் எனது கணவர் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று என்னை மிரட்டினார் என்றும், நான் எனது அண்ணனுக்கு செல்போன் மூலமாக தெரிவித்தேன் என்றும், என் அண்ணன் உதவியுடன் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து சிகிச்சை முடித்து பின்பு பந்தநல்லூர் காவ்ல நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது தற்போது 1வது எதிரி கணவர் என்பதாலும், நான் தற்போது கணவருடன் சேர்ந்து வாழ்ந்து வருவதாலும், நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் ஆகிவிட்டதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**